Judicial Form No.53
( See Rule 42 )
**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATHUR**
**Case No. CC. No. 136/2024**
**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3 Page.No.**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரத்தினவேலு | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முருகன் | தொழில் | வார்டு கவுன்சிலர் |
| கிராமம் | ஆலங்காயம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 08th day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :</u> எதிரி ஆஜர்

நான் தற்போது ஆலங்காயத்தில் வசித்து வருகிறேன். நான் பெத்தூர் பேரூராட்சியில் 9 வது வார்டு கவுன்சிலராக உள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் ஆலங்காயம் அரசு தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக உள்ளார். கடந்த ஆண்டு தேதி மாதம் நினைவில்லை. அரசு தொடக்கப்பள்ளியில் மரங்கள் வெட்டப்பட்டதாக பொது மக்கள் பேசிக்கொண்டார்கள். நான் பள்ளியில் சென்று பார்த்தேன். அங்கு காய்ந்த மரங்கள் வெட்டப்பட்ட நிலையில் இருந்தது யார் வெட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நேற்று போலீசார் சாட்சி அழைப்பாணை வழங்க வந்தபோது தான் இந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியவந்தது.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த ஆண்டு ஆஜர் எதிரி என்னிடம் வந்து நான் வார்டு கவுன்சிலர் என்ற முறையில் பள்ளி வளாகத்தில் உள்ள மரங்கள் காய்ந்து போனதாகவும், அவை விழுந்தால் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் அதை வெட்டவேண்டும் என்றும் ஆலோசனை கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு ஆஜர் எதிரி என்னை சந்தித்து பேசவில்லை. கார்பெண்டர் ஜெயசிலனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி மற்றும் ஜெயசீலன் ஆகியோர் மரங்கள் வெட்டுவது குறித்து என்னிடம் வந்து கேட்டபோது வனத்துறையை சேர்ந்த வேலாயுதம் என்பவரிடம் சென்று அது குறித்து ஆலோசித்தோம் என்றால் சரியல்ல. நான் பேரூராட்சி மூலம் தீர்மானம் இயற்றி மரங்களை வெட்டுவதற்கு வழி செய்வதாக ஆஜர் எதிரியிடம் கூறினேன் என்றால் தவறு. பஞ்சாயத்திற்கும் பள்ளியில் உள்ள மரங்களுக்கும் தொடர்பில்லை. கார்பெண்டர் ஜெயசீலன் பள்ளி வளாகத்தில் இருந்த மரங்களை வெட்டி எடுத்துக்கொண்டார் என்றும் அதற்காக ரூ. 1,80,000/- தொகையை பேசி ரூ. 5,000/- முன் பணமாக ஆஜர் எதிரி பெற்றுக்கொண்டார் என்றும் நான் மேற்கண்ட விவரங்களை நான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் தவறு. போலீசார் வந்து என்னை பார்க்கவே இல்லை. ஆஜர் எதிரியை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை தெரிவித்தார் எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

சாட்சியின் கையொப்பம்